# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 50

# மகா பிரமிடும் வேதமும்



## The Great Pyramid & The Bible

Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## மகா பிரமிடும் வேதமும்

## The Great Pyramid & The Bible



கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பு சகோதர சகோதரிகளே,

ஒன்றான மெய்தேவனாகிய நம் பரலோகப் பிதாவினாலும், அவருடைய ஒரே பேரான குமாரனாகிய நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

இன்றைய நாளிலும் நாம் பார்க்கப்போகிற பாடம் ***உலக அதிசயங்களில் ஒன்றான மகா பிரமிடு ஆகும்(The Great Pyramid). இது எகிப்து தேசத்தில் உள்ள கீசாவின் பிரமிட் ஆகும்(Great Pyramid of Giza).***

இந்த பிரமிடை குறித்த ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், இதற்கு முன் இருந்த 7 அதிசயங்களில் இந்த மகா பிரமிடும் ஒன்றாக இருந்தது. அதில் ஒன்று பாபிலோனின் தொங்கும் தோட்டம் ஆகும். அவைகள் எல்லாம் அழியும்போது, மறுமுறை உலக ஏழு அதிசயங்களை தேர்ந்தெடுக்கும்போது அதிலும் இந்த மகா பிரமிடும் இடம்பெற்றுள்ளது.

காலங்களால் அழியாத அழிக்கமுடியாத ஒரு உன்னத படைப்பாக காணப்படும் இப்பிரமிட்டின் அற்புதமான, அதிசயமான வடிவமைப்பும், இந்த பிரமிடுக்கும், வேதத்திற்கும் உள்ள தொடர்பைக் குறித்தும் நாம் பார்க்கலாம்.

முதலாவதாக இந்த பிரமிடைக் குறித்து வேதத்தில் சொல்லப்பட்டு இருக்கிறதா? என்று பார்க்கும்போது,

**ஏசாயா 19:19,20**


***“அக்காலத்திலே எகிப்து தேசத்தின் நடுவிலே கர்த்தருக்கு ஒரு பலிபீடமும், அதின் எல்லையருகே கர்த்தருக்கு ஒரு ஸ்தம்பமும் உண்டாயிருக்கும். அது எகிப்து தேசத்திலே சேனைகளின் கர்த்தருக்கு அடையாளமும் சாட்சியுமாயிருக்கும்”***

எகிப்தில் அப்படி என்ன பலிபீடம் கர்த்தருக்குஇருக்கமுடியும்? என்று இதுவரை யாருக்கும் தெரியவில்லை. சுமார் 150 ஆண்டுகளுக்குமுன்புதான் இந்த மகா பிரமிடு கர்த்தருடைய பிலிபீடத்தை குறிக்கிறது என்பதை கண்டுபிடித்தார்கள். இப்போது இந்த பிரமிடின் தோற்றம், நீளம் அகலம் இதன் உள்ளமைப்பு மற்றும் இது எவ்வாறு கர்த்தருக்கு ஒரு பலிபீடமாக கர்த்தருக்கு ஒரு ஸ்தம்பமாக இருக்கிறது? இவைகளைக் குறித்து இப்போது நாம் பார்க்கலாம்.

## மகா பிரமிடின் அமைப்பு

⇨ இந்த பிரமிடின் உயரம் 486 அடி ஆகும். இதன் உயரத்தை உதாரணமாக சொல்லவேண்டுமானால், ஒரு 50 மாடி கட்டிடம் கட்டினால் எவ்வளவு உயரம் இருக்குமோ அவ்வளவுஉயரமாக இது இருக்கிறது.

⇨ இதன் நீளம்764அடி நீளம் உடையது. அதாவது 764 சதுர அடி உள்ளதாகும். இது அமைந்துள்ள நிலத்தின் பரப்பு 13 ஏக்கர்ஆகும். அதாவது 13 ஏக்கர்நிலப்பரப்பில் இந்தபிரமிடானது 486 அடி உயரமாக கட்டப்பட்டுள்ளது. எகிப்தில் அநேக பிரமிடுகள் இருந்தாலும் இந்த பிரமிடின் கைவேலைப்பாடு நமக்கு பிரமிப்பை உண்டாக்கக் கூடியதாக இருக்கிறது.



⇨ இவற்றில் உள்ள ஒரு கல்லின் எடை 16 டன் ஆகும். அதாவது 16,000 கிலோ ஆகும்(1000 x16). ஒவ்வொரு கல்லுக்கும் உள்ள இடைவெளி ஒரு காகிதம் உள்ளே செல்லும் அளவுதான். அவ்வளவு நெருக்கமாக ஒரு கல்லுக்கும், இன்னொரு கல்லுக்கும் இடையில் காகித அளவு சிமெண்ட் பூசி கற்கள்இணைக்கப்பட்டுள்ளன.

⇨இதில் ***ஒரு கல்லின் எடை மட்டும் 880 டன்*** உள்ளதாக கண்டுபிடித்துள்ளனர். அப்படியானால் அந்த கல்லின் எடை (1000 X 880) 8,80,000 கிலோ(எட்டு இலட்சத்து எண்பதாயிரம்) ஆகும். இந்த கல்லை எத்தனைபேர் தூக்கினார்கள்? இந்தக் கால் எப்படி வெட்டி எடுக்கப்பட்டது? என்பதெல்லாம் மிக மிக ஆச்சரியமாக இருக்கிறது.

⇨ ***ஒவ்வொரு கல்லின் நீளமும் 30 அடி*** ஆகும். இக் காலத்தில் இந்தளவு கற்களை வெட்டி எடுக்கக்கூடிய எந்த இயந்திரமும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அப்படியானால் எப்படி இந்த கற்களை வெட்டி எடுத்தார்கள்? எதைக்கொண்டு வெட்டினார்கள் என்பதெல்லாம் ஆச்சரியமே.

⇨ இதன் காலம்(வயது) 4000 வருடம் பழைமை வாய்ந்ததாகும். இவற்றை ஆராய்ச்சி செய்ததில் கிமு 2170 ல் கட்டப்பட்டதாக கணக்கிடப்பட்டுள்ளது.

⇨ இந்தப் பிரமிடு முழுவதும் மேல் பகுதியில் சுண்ணாம்பு பூச்சு பூசப்பட்டிருந்தது. இதனால் மத்தியான வெய்யில் படும்போது இந்த பிரமிடு ஒளிவீசும். அப்போது ஒரு நட்சத்திரமே இந்த பூமியில் வந்து இறங்கியதுபோல் பார்க்கிறவர்களின் கண்களுக்கு அவ்வளவு அழகாக இப்பிரமிடு காட்சிஅளிக்கும்.***இந்த பிரமிடின் மொத்த எடை சுமார் 6 மில்லியன் டன்*** ஆகும்.


⇨ ஒரு சமயம் இந்த பிரமிடை இடித்து அப்புறப்படுத்த விரும்பினால் 1000 டன் ஏற்றக்கூடிய 6000 இரயில்கள் (Trains) தேவைப்படும். அதற்காக செலவு செய்ய போதுமான பணம் எகிப்திலேயே இல்லை. இதன்மூலம் நாம் சொல்லவிரும்பும் காரியம் என்றென்றைக்கும் அழிக்கமுடியாத, நிற்க கூடியதாக இப்பிரமிடு விளங்குகிறது.

இம்மகா பெரிய பிரமிடை கட்டியது யாராக இருக்கமுடியும் என்று பார்க்கும்போது, மெல்கிசேதேக்கு (Melchizedek) என்று யூகிக்க முடிகிறது. ஏனென்றால் அந்நாட்களில் இக்காஸ் (Hyksos) 'மேய்ப்பனின் ராஜாக்கள்" என்ற பிரிவினர் இருந்தனர். அந்த பிரிவை சேர்ந்தவரே இந்த மெல்கிசேதேக்கு. இவர்கள் ஒரு நாட்டிற்குள் செல்லும்போது, அந்நாட்டினர் எந்த எதிர்ப்புமின்றி


இவர்களை ஏற்றுக்கொண்டனர். இந்த மெல்கிசேதேக்கைக் குறித்து நாம் வேதத்தில் ஆபிரகாமின் காலத்தில் பார்க்கிறோம்(ஆதியாகமம் 14:18-20).

⇨ இந்த கீசாவின் பிரமிடு கணித முறையின்படியும், புவியியல் முறைப்படியும், வானவியல் முறைப்படியும் அமைக்கப்பட்டுள்ளது.

## கணிதம்




கணித கொள்கைகளில் மிக முக்கியமானதான - பை (π) விகிதத்தை மகா பிரமிடு வெளிப்படுத்துகிறது. இந்த பை விகிதம் என்றால் என்ன? இது ஒரு வட்டத்தின் சுற்றளவிற்கும் அதன் விட்டத்திற்கும் இடையில் உள்ள உறவாகும். கணித மேதைகள் இந்த விகிதத்தை கிரேக்க உயிரெழுத்தில் பதினாராம் எழுத்தாகிய பை(π) மூலம் குறிக்கிறார்கள். இன்று இதன் மதிப்பு 3.141592 என கண்டறியப்பட்டுள்ளது. இப்பிரமிடு கட்டிட பார்முலா முறையில் அக்காலத்திலேயே கட்டப்பட்டுள்ளது.




ஆனால் இம்மாதிரியான கட்டிட பார்முலா கிபி 6ம் நூற்றாண்டில்தான் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் 2700 ஆண்டுகளுக்கு முன்பாகவே இப்பிரமிடு கட்டப்பட்டுள்ளது. அதாவது இந்த கட்டிட பார்முலா கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பதாகவே கட்டப்பட்டுள்ளது. ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடியதாக உள்ளது.

மகா பிரமிடின் உயரம், அரைவட்டத்தின் அளவாக கருதப்பட்டு, அதன்மூலம் ஒரு வட்டம் வரைந்தால், அது பிரமிடின் அடித்தள சதுரத்தின் நான்கு முனைகளையும் தொட்டுச் செல்லும். இது பிரமிடு கட்டப்பட்டுள்ள 51 51 கோணத்தின் தனித்தன்மையின் மூலம் நிறைவேறக்கூடியதாகும்.

## புவியியல்

மகா பிரமிடு நிறுத்தப்பட்டுள்ள விதம் - அதன் நான்கு முனைகளும் மிகச் சரியாக அதே சமயம் துல்லியமாக , திசைநோக்கியின் நான்கு திசைகளையும் காண்பிக்கிறது. இது பிரமிடைக் கட்டின மகா சிற்பி, நான்கு திசைகளையும் அதன்மூலம் காண்பிப்பதாக இருக்கிறது.

இது மாத்திரமல்லாமல், ஏசாயா 40:22ல் காண்கிறபடி பூமியானது உருண்டையாக, வட்டவடிவில் உள்ளதை அறிவோம். இப்பொழுது ஒரு வட்டம் வரைய பாகைமானி(காம்பஸ்) வேண்டும் என்றும், அதை பயன்படுத்தும்போது ஒரு புள்ளியில் வைத்து வரையவேண்டும் என்றும், அது அவ்வட்டத்தின் மையப்புள்ளியாக மாறுவதையும் நாம் அறிவோம்.


இப்பொழுது பூமி வட்டவடிவில் இருக்குமானால்அதற்கு ஒரு மையப்புள்ளி இருக்கவேண்டும். அந்த மையப்புள்ளி எது? எங்கே உள்ளது?

அது மகா பிரமிடு நிற்கிற இடமேயன்றி வேறல்ல.அந்த வகையில் இது உலகம் முழுவதும் நேரத்தைகணக்கிட எற்ற இடமாக இருக்கிறது.

நாம் கவனிக்கவேண்டிய மற்றுமொரு உண்மை என்னவென்றால், மகா பிரமிடானது மிகச்சரியாக பூமியின் இரண்டு மாபெரும் தரைப்பகுதிகளாகிய - ஓரியன்ட் (Orient) என்றழைக்கப்படும் மத்திய

தரைக்கடலுக்கு கிழக்குப்பகுதி மற்றும் ஆக்ஸிடன்ட் (Occident என்றழைக்கப்படும் மத்திய தரைக்கடலின் மேற்குப் பகுதிக்கு இடையில் அமைந்துள்ளது.

இப்படி எந்த ஒரு கோணத்தில் பார்த்தாலும், மகா பிரமிடு, இந்த பூமியின் மிக சரியான மையமாக இருக்கிறது.



LOWER EGYPT THE GEOGRAPHICAL CENTER OF THE LAND SURFACE OF THE WHOLE WORLD


புவியியல் முறைப்படி பார்க்கும்போது இந்த பிரமிடு பூமியின் மத்திய ரேகை கோட்டின்நடுவில் அமைந்துள்ளது. இந்த பிரமிடின் 4முனைகள் வடக்கு தெற்கு கிழக்கு மேற்கு சரியாக காண்பிக்கிறது.

## *வானவியல்*

சூரிய வருடம் என்பது பூமி சூரியனை ஒரு முழு சுற்று சுற்றிவர எடுத்துக்கொள்ளும் காலஅளவு ஆகும். ஜான் டெய்லர் என்பவர்முதன்முதலில் மகா பிரமிடின் அடித்தள சுற்றளவைஅளந்து பார்த்து, அது 365.242 கியூபிட்ஸ் அல்லது ஒரு சூரிய வருடத்தின் சரியான கால அளவுஎன்று கூறினார். இவ்விதமாக கியூபிட்களில் பிரமிடை ஒரு முறை சுற்றி அளக்கும்போது அது பூமி ஒரு முறை சூரியனை சுற்றி வர எடுத்துக்கொள்ளும் கால அளவைக்குறிக்கிறது.

பின்பு வில்லியம் பெட்ரி என்பவர், முதன்முதலில் பிரமிடில் ஏறும் ஒவ்வொரு பத்தடிகளுக்கும் செய்குத்தாக ஒன்பது அடிகள்ஏறுவதை கண்டுபிடித்தார்.

இது அவரை ஒரு பெருக்குதொகைக்கு -$10^9$(பத்தின் அடுக்கு ஒன்பது) வழிநடத்தியது.. பின்பு அவர் பிரமிடின் உயரத்தை இன்ச்சுகளின்(5807.05”)$10^9$ மூலம் பெருக்கும்பொழுது அது பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் உள்ள தூரத்தை மைல்களில் தருவதை தற்செயலாக கண்டுபிடித்தார். அவற்றின் அளவு9,16,51,673 மைல் தூரமாகும். (146.9 மில்லியன் கி.மீ) இவ்வாறெல்லாம் தனிச்சிறப்புகளை அதிசயங்களை இந்த பிரமிடில் பார்க்கும்போது, இந்தபிரமிடை சாதாரண ஒரு மனிதன் கட்டியிருக்க முடியாது என்பது உண்மையாகிறது.




அப்படியானால்

- இதைக் கட்டியது யார்?
- இந்த பிரமிடு கட்ட திட்டம்போட்டது யார்?

- ⇨ ஏன் இதைக் கட்டவேண்டும்?
- ⇨ இப்படி ஒரு பிரமிடு ஏன் பூமியில் கட்டப்படவேண்டும்?
- ⇨ இப்பிரமிடுக்கும் வேதத்திற்கும் என்ன சம்பந்தம்?
- ⇨ வேதத்தில் இந்த பிரமிடைப் பற்றி என்ன சொல்கிறது?
- ⇨ வேதத்தின் மூலமாக இந்த பிரமிடு நமக்கு என்ன சத்தியங்களை போதிக்கிறது?

இவைகளைக் குறித்து இன்றைய பாடத்தில் நாம் பார்க்கலாம். இந்த பிரமிடு கட்டப்படுவதற்கு பின்னணியில் யார் இருந்திருப்பார்கள் என்று பார்க்கும்போது,


**சங்கீதம்118:22**

***"வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று"***

***"இதோஅஸ்திபாரமாக ஒரு கல்லை நான்(தேவன்) சீயோனிலே வைக்கிறேன்.***

**ஏசாயா 28:16**

***அது பரீட்சிக்கப்பட்டதும் விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரம் உள்ளதுமான மூலைக்கல்லாகும்.***



இந்த இரண்டு வசனங்களிலும் 'தலைக்கல்" என்றும் 'மூலைக்கல்" என்றும் சொல்லப்பட்டுள்ளது, இது எதை அடையாளமாகக் காட்டுகிறது? பொதுவாக நாம் கட்டும் கட்டிடத்தில் 'தலைக்கல்" என்று ஒன்றும் இல்லை அவற்றை மூலைக்கல் என்று தான் அழைக்கிறோம். தலைக்கல் என்பது கட்டிடத்தின் தலைப்பகுதியில்(மேல்பகுதி) வரும் கல் தான் தலைக்கல் ஆகும்.

இப்போது இந்த பிரமிடை கவனமாக பார்த்தால் இப்பிரமிடின் அமைப்பில் தலைப்பகுதி உள்ளது. அதன்மேல் கடைசிக்கல் இந்த அமைப்பில்தான் ஒரே கல்லாக வைத்திருக்கவேண்டும்.

எனவே அக்கல் பிரமிடின் தலைக்கல் ஆகும். மட்டுமல்ல இந்த மேல்பகுதி ஒரு மூலைப்பகுதியும் ஆகும். எனவே அதே கல் மூலைக்கல் ஆகவும் இருக்கிறது. அடுத்ததாக இந்த மேல்பகுதி இல்லாவிட்டால் இந்த அமைப்பு மாறிவிடும். எனவே முதலாவது இக்கட்டிடத்திற்கு(பிரமிடுக்கு) மேல் கல்லை சரிசெய்துதான் (மேலிருந்து கீழாக ஒரு அமைப்பு உண்டாக்கிய பிறகே) கட்டிடம் கட்டப்பட்டிருக்கவேண்டும். எனவே முதல் கல்லாக 'அஸ்திபாரக் கல்லாகவும்" இக்கல் இருக்கிறது. ஆக மேல்பகுதியில் அமைந்துள்ள ஒரே கல் தலைக்கல்லாகவும் மூலைக்கல்லாகவும் அஸ்தபாரக் கல்லாகவும் இருக்கிறது.

## *வேதமும் பிரமிடும்*

இப்போது நாம் முன்பு பார்த்த வசனத்திற்குள் கடந்துசெல்லலாம் -

**ஏசாயா 19:19**

***"அக்காலத்திலே எகிப்து தேசத்தின் நடுவிலே கர்த்தருக்கு ஒரு பலிபீடமும், அதின் எல்லையருகே கர்த்தருக்கு ஒருஸ்தம்பமும் உண்டாயிருக்கும்.***

***எகிப்திலே எப்படி கர்த்தருக்கு சாட்சி,அடையாளம்இருக்கமுடியும்? என்று பார்க்கும்போது,***

**எரேமியா 32:20**

***"இந்நாள் வரைக்கும் விளங்குகிற அடையாளங்களையும் அற்புதங்களையும்***

***தேவரீர் எகிப்து தேசத்திலே செய்து"***

என்று வாசிக்கிறோம். இந்த இரண்டு வசனங்களையும் பார்க்கும்போது இவை எகிப்தில் உள்ள கீசா பிரமிடை குறிப்பிடுகின்றன என்பது விளங்கும். மட்டுமல்ல,

**ஏசாயா 19:20**

***"அது எகிப்து தேசத்திலே சேனைகளின் கர்த்தருக்கு அடையாளமும் சாட்சியுமாயிருக்கும்"***


இந்த பிரமிடு கர்த்தருக்கு அடையாளமாக சாட்சியுமாக இருக்கும் என்று பார்க்கிறோம்.

இது எங்கே இருக்கும் என்று பார்க்கும்போது

**ஏசாயா19:19**

***"எகிப்து தேசத்தின் நடுவிலே..." "அதின் எல்லையருகே.."***

ஒரு தேசத்திலே எல்லைப் பகுதி முடிவாகவும், நடுப்பகுதி தேசத்தின் மத்தியிலும் இருக்கும். ஆனால் பிரமிடு இருக்கும் இடம் எகிப்தின் நடுவிலும் இருக்கவேண்டும். அதேசமயத்தில் எல்லையிலும் இருக்கவேண்டும், அதாவது எகிப்து இரண்டு பகுதியாக இருக்கிறது. மேல் பகுதியில் கீழ் எகிப்தும், கீழ் பகுதியில் மேல் எகிப்தும் இருக்கிறது. இவ்விரண்டுக்கும் மத்தியில்தான் கீசா பிரமிடு இருக்கிறது. அதே சமயத்தில் இவ்விரண்டின் எல்லையில் அமைந்துள்ளது. மேலும் கீசா என்பதின் அராமிக் விளக்கம் எல்லை என்பதே. எவ்வளவு ஒரு தெளிவாக வேதம் கூறுகிறது பார்த்தீர்களா?




இது எவ்வாறு அடையாளமாகவும் சாட்சியமாகவும் இருக்கிறது என்று பார்க்கும்போது, அடையாளம் என்பதன் எபிரேய விளக்கம்(ஓத்) 'நிரூபணம்" . எப்படி இப்பிரமிடு நிருபணமாக இருக்கிறது?

இன்று உலகில் தேவன் இல்லை என்றும், மனிதன் தான் தன் விருப்பப்படி கடவுளை உருவாக்கினான். தேவன் என்று ஒருவர் இல்லை என்று சொல்லுகின்றனர்.

இந்த மகா பிரமிடு சேனைகளின் கர்த்தருக்கு நிரூபணமாக(ஆதாரமாக) இருக்கிறது. சாட்சி இதன் எபிரேய வார்த்தை - எட் என்று உள்ளது. இதன் பொருள் சாதனை அல்லது சாட்சி ஆகும். தேவன் வேதத்தில் முதலாவது சாட்சியை வைத்திருக்கிறார். இரண்டாவது சாட்சியாக இப்பூமியில் இப்பிரமிடை வைத்திருக்கிறார்.

ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரை உள்ள வேத காரியங்களை இக்கற்கள்(பிரமிடின் கற்கள்)பேசுகின்றவைகளாக இருக்கின்றது. இதைக் குறித்து இயேசு சொல்லும்போது,

**லூக்கா 19:40**

***"இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும்(பேசும்) என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்".***

என்று இக்கற்களையே சொன்னதுபோல் இக்கற்கள் பேசுகின்றவைகளாக இருக்கின்றது.

இது கர்த்தருக்கு பலிபீடமாக, கர்த்தருக்கு ஓர் ஸ்தம்பமாக எப்படி இருக்கிறது? என்று பார்க்கும்போது, பலிபீடம் ஆசரிப்புக் கூடாரத்தில் வெண்கல பலிபீடம் பற்றி நமக்குத் தெரியும். அவற்றில் இஸ்ரயேலர் தங்கள் பலிகளை இங்கு தகனபலியாக பலியிடுவார்கள். மேலும் பரிசுத்த ஸ்தலத்தில் 'தூப பலிபீடம்" இருக்கிறது. இவைகளைக் குறிக்காதா ? என்றால் இல்லை.

இந்த பலிபீடம் எதைக் குறிக்கிறது என்று பார்க்கும்போது,

**எபிரேயர் 13:15**

***"ஆகையால் அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்"***

இதிலிருந்து இந்த பலி ஸ்தோத்திரபலியை(அதாவது உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை) குறிக்கிறது. இந்த பிரமிடை பார்க்கும்போது, இதில் உள்ள இரகசியங்களையும், வேதத்தில் உள்ள தொடர்புகளையும் ஜனங்கள் பார்த்து அந்நாட்களில் தேவனுக்கு ஸ்தோத்திர பலியை ஏறெடுப்பதால், இது பலிபீடமாக இருக்கிறது.

ஸ்தம்பம் எதைக் குறிக்கிறது என்றால், இதன் எபிரேய வார்த்தை 'மெட்ஸ்சேபா" (ஸ்ட்ராங்ஸ் 4676) . இதன் பொருள் நினைவுத் தூண் அல்லது நினைவு ஸ்தம்பம்.

உலகில் ராணுவ வீரர்கள் மரிக்கும்பொது நினைவுத் தூண் வைப்பதை பார்த்திருக்கிறோம். அதேபோல் இந்த பிரமிடும் நினைவுத் தூணாக இருக்கிறது. இதன்முன் நின்றால் பிதாவைக் குறித்த எண்ணம் வரும். அவரை நாம் பார்க்கமுடியாது. ஆனால் இதுபோன்ற கிரியைகளின்மூலமாக நாம் அவரை அறிந்துகொள்ளமுடிகிறது.

பிரமிடின் உள்பக்கம் வழிகளும், அறைகளும் உள்ளன. பிரமிடின் 50 அடி உயரத்தில் நுழைவுவாயில் உள்ளது. உள்ளே சென்றதும் கீழ்நோக்கி பாதை செல்கிறது. சற்று தூரம் சென்றதும் ஒரு வழிமேல்நோக்கி செல்கிறது. ஆனால் அந்த வழி சிவப்பு நிறம்கொண்ட ஒரு கல்லால் மூடப்பட்டிருக்கிறது, கீழ்நோக்கி செல்கிற பாதையின் முடிவில் ஒரு புதைகுழி காணப்படுகிறது. ஆனால் அதற்கு முன்பதாக மேலே செல்ல ஒரு நெருக்கமான பாதை செல்கிறது. அதில் சென்றால் சற்று தூரம் சென்றபின் ஒரு திறந்த வெளி(இளைப்பாறுவதற்கு தகுந்தாற்போல்) இருக்கிறது. அதற்கு சற்று மேலே சென்றால் இரண்டு வழி பிரிகிறது. ஒரு வழி ராணியின் அறைக்குச் செல்கிறது. மற்றொன்று மேல்நோக்கி செல்லும் பெரிய வழியில் சென்றால் அங்கு ஒரு முன் அறை இருக்கிறது. அதிலிருந்து ராஜாவின் அறைக்கு செல்ல மிகவும் குனிந்து செல்லக்கூடிய மூன்று இடங்கள் உண்டு.இவைகளை கடந்துசென்றால் மேலான அறை ராஜாவின் அறையை சென்று அடையலாம்.

இவைகளே பிரமிடின் உள் காணும்அமைப்பு ஆகும். இவைகள் ஒவ்வொன்றும் எதற்கு அடையாளமாக, வேதத்திலிருந்து எவைகளை ஞாபகப்படுத்துகிறதாய் இருக்கிறது என்று பார்ப்போம்.



### *நுழைவாயில்*

இந்த பிரமிடுக்குள் நுழைய வேண்டுமானால் இதன் நுழை வாயில் பூமியிலிருந்து 50 அடி உயரத்தில் இருக்கிறது. இந்த 50 அடி உயரம் எதைக் குறிக்கிறதென்றால் ஆதி மனிதன்

பரிபூரணமாக எல்லா பூமியின் சிருஷ்களுக்கும் மேலான நிலையில் சிருஷ்டிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

நுழைவுவாயிலின் உள்ளே சென்றதும் உடனே பாதை நேராகவோ அல்லது மேல் நோக்கியோ செல்லாமல் கீழ் நோக்கி செல்வது எதைக் குறிக்கிறதென்றால் ஆதியில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன்(ஆதாம், ஏவாள்) பரிபூரண மனிதன் சிறிது நாட்களிலேயே(2வருடம்)
பாவத்தில் விழுந்துவிட்டதைக் குறிக்கிறது.

## *கீழ்நோக்கிய பாதை*

பரிபூரணமாக படைக்கப்பட்ட மனிதன் குறுகிய காலத்தில் பாவத்தில் விழுந்தான் இதைக் குறித்து வேதம் கூறும்போது,

**ரோமர் 5:12**

***"இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால் மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று".***

மேலும் உலகத்தில் இந்த பாவம் அதிகரித்துக்கொண்டேதான் இருக்கிறது. இதை முதன்முதலில் திறந்தது ஆதாம். இந்த பாதையை 'விலாசமான வழி" என்று கூறலாம். இதில்தான் இன்று உலகம் முழுவதும் சென்றுகொண்டிருக்கிறது. இந்த பாதை முடிவில் 'ஒரு குழியில்" சென்று முடிவடைகிறது.

## *குழி*(Pit)

விலாசமான பாதையின் முடிவு இந்த குழி ஆகும். இந்த குழி எதை அடையாளமாக காட்டுகிறதென்றால்,

**மத்தேயு7:13**

***"கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாகவும் இருக்கிறது. அதின் வழியாய் பிரவேசிக்கிறவர்கள்அநேகர்".***


இந்த வழி முடிவில் 'குழி" இருப்பதினால் இது பாவ வழியின் முடிவாகும். அதாவது மரணத்தைக் குறிக்கிறது. "***பாவத்தின் சம்பளம் மரணம்***"

**சங்கீதம் 55:23**

***" தேவனே, நீர்அவர்களை அழிவின்குழியில் இறங்கப்பண்ணுவீர்"***

**ஏசாயா 38:18**

***"பாதாளம் உம்மைத் துதியாது.மரணம் உம்மைப் போற்றாது. குழியில்***



***இறங்குகிறவர்கள் உம்முடைய சத்தியத்தை தியானிப்பதில்லை"***

இதன்மூலம் ஆதாமின் சந்ததி மரணத்திற்கு நேராக கடந்துசெல்வதை இது குறிக்கிறது.

### *மேல்நோக்கு பாதையும், சிவப்பு தடைக் கல்லும்*

கீழ்நோக்கு பாதையில் சிறிது தூரம் சென்றவுடன் ஒரு மேல்நோக்கு பாதை இருப்பதைப் பார்க்கிறோம். இது கீழ்நோக்கு பாதையிலிருந்து விலகி மேல்நோக்கிச் செல்கிறது.

இது எதைக் காட்டுகிறதென்றால் முழு மனுக்குலமும் பாவத்தினால் மரணத்தை நோக்கி சென்றுகொண்டிருக்கும்போது, இதிலிருந்து மனிதனை விடுவிக்க (மரணத்திலிருந்து விடுபட்டு வாழ தேவனால் கொடுத்த 'நியாயப்பிரமாணத்தை" குறிக்கிறது.

**லேவியராகமம் 18:5**

***"ஆகையால் என் கட்டளைகளையும் என்நியாயங்களையும் கைக்கொள்ளக்கடவீர்கள். அவைகளின்படி செய்கிறவன் எவனும் அவைகளால் பிழைப்பான். நான் கர்த்தர்"***

**கலாத்தியர் 3:12**

***"நியாயப்பிரமாணமோ விசுவாசத்திற்குரியதல்ல. அவைகளை செய்கிற மனுஷனே அவைகளால் பிழைப்பான்"***

### *சிவப்பு தடைக்கல் எதைக் குறிக்கிறது?*

இந்த மேல்நோக்கு பாதையை உள்ளே செல்லமுடியாதவாறு ஒரு சிவப்பு கிரானைட் கல் அடைத்துக்கொண்டிருக்கிறது. இது எதைக் குறிக்கிறதென்றால், சிவப்பு நிறம் - தேவனுடைய தெய்வீகத்தைக் குறிக்கிறது. இங்கு தேவனுடைய தெய்வீகம் நியாயப்பிரமாணத்தைக் குறிக்கிறது.

அதாவது இது தேவனுடைய பூரணமான நியாயப்பிரமாணத்தை குறிக்கிறது. இவை மேல் நோக்கு பாதையில் போகாதபடி அடைத்துக்கொண்டிருப்பது இந்த நியாயப்பிரமாணத்தின் மூலமாக(இயேசுவைத் தவிர) யாரும் பிழைக்க முடியவில்லை. அதாவது முழுவதுமாக அதைக் கைக்கொள்ள முடியவில்லை என்பதைக் குறிக்கிறது.

**கலாத்தியர் 3:11**

***"நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லை"***

என்பது வெளியரங்கமாயிருக்கிறது. ஆக மேலே செல்ல ஒரு வழி இருந்தும் யாரும் அதன் வழியாக செல்ல முடியாத ஒரு சூழ்நிலையை பார்க்கிறோம்.

எனவே மேலே செல்ல வேறு ஏதாவது வழி இருக்கிறதா என்று பார்க்கும்போது மரணத்திலிருந்து விடுபட்டு வர அதாவது புதைக்குழியில் இருந்து மேலே வர புதைக்குழியிலிருந்து சற்று மேலே ஒரு நெருக்கமான வழி செல்வதை பார்க்க முடிகிறது. அந்த வழியைக் குறித்து இப்போது பார்க்கலாம்.

### *மேல்நோக்குபாதை (அ) நெருக்கமான பாதை*

குழியை நோக்கி (மரணத்தை நோக்கி) சென்றவர்கள்அதற்கு செல்லாதபடி மேலே செல்ல இருக்கும் ஒரே வழி, கடைசி வழி இந்த மேல் நோக்கி செல்லும் வழியாகும். இந்த வழி எதைக் குறிக்கிறதென்றால் 'நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து - வழியாக இருப்பதைக் குறிக்கிறது. அதன் மூலம் 'இரட்சிப்பின்" பாதையில் செல்வதை அடையாளப்படுத்துகிறது.

**அப்போஸ்தலர் 4:12**

***"அவராலேயன்றி(இயேசுவாலேயன்றி) வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை".***

இதைக் குறித்து இயேசு குறிப்பிடும்போது,

**யோவான் 14:6**

***"அதற்கு இயேசு : நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்***

**யோவான் 11:25,26**

***"இயேசு அவனைநோக்கி : நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்தும் என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்"***

ஆக இந்த மேல்நோக்கு வழி, நெருக்கமான வழி நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும் அவர் மூலம் வருகிற இரட்சிப்பையும் குறிக்கிறது.

### ***இளைப்பாறும் இடம் அல்லது சிந்திக்கிற இடம***

இந்த இடம் மேல்நோக்கு இடுக்கமான வழியில் வரும்போது சற்று மேலே வந்தால் அங்கு ஒரு திறந்தவெளியாக இருக்கிறது. இந்த இடம் "***க்குரோட்டோ***" என்று அழைக்கப்படுகிறது. இந்த இடம் எதற்கு அடையாளமாக இருக்கிறதென்றால் ஒரு சிந்தனை செய்யக்கூடிய பூங்காக்களில் அமர்ந்து இளைப்பாறுவது (அ) சிந்திப்பது போன்ற ஒரு இடம் - இது எதைக் குறிக்கிறது?

இயேசு எவ்வாறு மீட்கும்பொருள் ஆனார் என்பது பற்றிய சிந்தனையை இது தருகிறது.

**1தீமோத்தேயு2:6**

***"எல்லாரையும் மீட்கும்பொருளாகதம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே"***

**ஓசியா 13:14**

***"அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன். அவர்களை மரணத்திற்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்"***

**1கொரிந்தியர் 15:21,22**

***"மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல் கிறிஸ்துவுக்குள் எல்லோரும் உயிர்ப்பிக்கப்படுவர்".***

மேற்குறிப்பிட்ட வசனங்கள் சிலுவையில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்காக என்னசெய்தார் என்பதை குறிக்கிறது. இதை விளக்கவே இதைக் குறித்த அறிவை பெற்றுக்கொள்வதையே இந்த இடம் குறிக்கிறது. இதைக் கடந்துமேலே சென்றால் இரண்டு வழிகள் செல்கின்றன. ஒன்று ராணியின் அறைக்கும், மற்றொன்று ராஜாவின் அறைக்கும் கடந்து செல்கிறது. இவை இரண்டும் இரண்டு இரட்சிப்பை குறித்து கூறுகிறது.

1. பரலோக இரட்சிப்பு 2. பூலோக இரட்சிப்பு

இந்த இரண்டு இரட்சிப்புக்களை குறித்து வாசிக்கிறோம்


**2தீமோத்தேயு1:10**

***"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிரசன்னமானதினாலே அந்தக் கிருபை இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டது. அவர் மரணத்தை பரிகரித்து ஜீவனையும்,அழியாமையையும் சுவிசேஷத்தினால் வெளியரங்கமாக்கினார்"***

ஜீவன் என்பது ராணியின் அறையையும்(பூலோக இரட்சிப்பு) அழியாமை என்பது ராஜாவின் அறையையும்(பரலோக இரட்சிப்பு) இப்போது நாம் ராஜாவின் அறைக்குச் செல்வதை குறித்து பார்க்கலாம் .

### *படிக்கட்டுக்கள் உள்ள பெரிய வழி*

ராஜாவின் அறைக்குச் செல்ல நாம் இப்போது படிக்கட்டுகள் போன்ற ஓட்டைகள் உள்ளன. ஒரு பெரிய வழியில் மேலே செல்லவேண்டும். இந்த வழியானது பெரிய வழி ஆகும். அவ்வழி 28 அடி உயரமும், 155 அடி நீளமும் உடையது. இவற்றின் இருபுறமும் கையினால் பிடித்துக்கொண்டு முன்னேற(படிக்கட்டுக்கள் அல்ல) ஓட்டைகள் உள்ளன. இவைகளைப் பிடித்து பிடித்து மேலே செல்லவேண்டும்.




இந்த பெரிய வழி எதைக் குறிக்கிறதென்றால் (இதுவரை நெருக்கமான வழியில் சிரமப்பட்டு வந்து இப்போது எந்த சிரமமுமில்லாமல் மேலே இடைவெளி இருபக்கமும் தாராளமான வழி கிறிஸ்துவுக்குள் இருக்கிற சுயாதீனத்தைக் குறிக்கிறது.

**கலாத்தியர் 5:1**

***"ஆனபடியினாலே நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல் கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையில் நிலைகொண்டிருங்கள்"***

மூட நம்பிக்கைகள் அடிமைத்தனங்கள், பாரம்பரியங்கள், மதக்கோட்பாடுகள் இவைகளிலிருந்து கிறிஸ்து நம்மை விடுதலை செய்ததைக்குறிக்கிறது.

**யோவான் 8:38**

***"குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்"***

உலக மக்களுக்கு இந்த விடுதலை இல்லை. அவர்கள் பலவிதமான சடங்காச்சாரங்களில் சிக்கி அடிமைப்பட்டு இருக்கிறார்கள். இந்த பெரிய வழிக்கு நேர் கீழே நாம் பார்த்த நியாயப்பிரமாண வழி இருப்பதை பார்க்கமுடிகிறது. அதைச் சேர்ந்தமாதிரியே இப்பெரிய வழி மேலே செல்கிறதை பார்க்கிறோம். இது எதைக் குறிக்கிறதென்றால்,

**கலாத்தியர் 3:24**

***"இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாய் இருந்தது"***

ஏன் இங்கு கைபிடித்து செல்ல ஓட்டைகள் உள்ளது?

ஏனென்றால் இவ்விடத்தில் கவனமாக செல்லவேண்டும். ஒரு அடி சருக்கினாலும் கீழே விழவேண்டியதுதான்.இது எதைக் குறிக்கிறதென்றால்

**2கொரிந்தியர்5:6**

***"நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்"***

இதைக் கடந்து சென்றால் ஒரு முன் அறை(Ante Chamber)மேலே வருகிறது.

### *கிரேட் ஸ்டெப்* (Great step)

முன் அறைக்கு முன்பதாக அதற்கு முன் ஒரு படி உள்ளது. இது 'கிரேட் ஸ்டெப்" என்று அழைக்கப்படுகிறது. கையினால் ஓட்டைகளை பிடித்து ஏறிவந்து நிற்கிற இடம். அங்கு நின்று சற்று இளைப்பாறலாம். அந்த இடத்திலிருந்து பார்த்தால், நாம் கடந்து வந்த வழிகளையெல்லாம் பார்க்கமுடியும். இது எதைக் குறிக்கிறதென்றால், நாம் இதுவரை கடந்து வந்த பாதைகளை, தேவன் நமக்கு செய்த நன்மைகளைநினைத்து, கிருபைகளை நினைத்துப் பார்க்கவும், தேவனுக்கு நன்றி சொல்லவும் ஞாபகப்படுத்துவதற்கு அடையாளமாக இருக்கிறது.

இந்த கிரேட் ஸ்டெப் கடந்து சென்றால் முன் அறை வருகிறது. இந்த முன் அறை வசதியாக இல்லை. இதில் மூன்று துவாரங்கள் போன்ற(குகை போன்ற) வழிகள் (படத்தில் காட்டப்பட்டுள்ளபடி) முதல் வழியைவிட அடுத்தது சிறியதாகவும், அதைவிட அடுத்தது இன்னும் குறுகியதாகவும், மூன்றாவது இன்னும் குறுகியதாகவும் இருக்கிறது. எனவே இவைகளுக்கு முன்பதாக நாம் கிரேட் ஸ்டெபில் நாம் ஒரு சில காரியங்களை முடிவு செய்யவேண்டும். இதைக் குறித்து இயேசுகிறிஸ்து கூறும்போது


**லூக்கா 14:28-30**

***"உங்களில் ஒருவன் கோபுரங்கட்ட மனதாயிருந்து... செல்லுஞ் செலவைக் கணக்கு பார்க்கக்கடவன் என்றார்"***

தேவனுடைய சத்தியங்களை முழுவதுமாக அறிந்துகொண்ட பிறகு அவர்கள் சிந்தித்து முடிவெடுக்க தேவன் சமயம் தருகிறார். நாம் சத்தியத்தை கற்றுக்கொள்ளும்போது இந்த வேதத்தில் யூதர்களுக்கு என்னமுடிவு, உலக ஜனங்களுக்கு என்ன வாய்ப்பு, பிதாவைக் குறித்து எல்லா சத்தியங்களையும் அறிந்துகொண்டபின்பு,

- விரும்பினால் (ராஜாவின் அறைக்கு) உள்ளே போகலாம்

- உள்ளே செல்லும்பொது மூன்று முறை (குறுகிய வழியில்) குனிந்து செல்லவேண்டும். இவைகள் எதைஅடையாளப்படுத்துகிறது?




**மத்தேயு 16:24**

***"அப்பொழுது இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவை எடுத்து என்னைப் பின்பற்றக்கடவன்"***

1. தன்னைத்தான் வெறுக்கவேண்டும்
2. சிலுவையை எடுக்கவேண்டும்
3. கிறிஸ்துவை பின்பற்றவண்டும்.

நம்முடைய நினைவுகள் விருப்பங்கள், இச்சைகள் எல்லாவற்றையும் வெறுக்கவேண்டும். பாடுகளை கஷ்டங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும். இயேசு கிறிஸ்து நமக்கு வைத்த மாதிரியின்படி அவரைப் பின்பற்றவேண்டும். இவைகள் ஒரே நாளில் நடந்துவிடுவதில்லை. அதற்குக் காலம் பிடிக்கும்.

**ரோமர் 12:2**

***"நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்...***
***உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்"***

இவ்வாறு சொல்லும்போது, முன்னால் சிவப்பு கிரானைட் கல் ஒன்று தெரிகிறது. இந்த சிவப்பு தேவனுடைய நீதியை குறிக்கிறது. இங்கு சிவப்பு கிரானைட் கல் தேவனுடைய நீதியை - அதாவது இயேசுகிறிஸ்து சென்ற சிலுவையின் பாதையை சபைக்கும் தேவன் வைத்திருப்பதை அந்த பாதையின் வழியாகவே சபையும் பரலோகம் செல்லவேண்டும் என்பதையே குறிக்கிறது(அப்போஸ்தலர்14:22, பிலிப்பியர்1:29, 2தீமோத்தேயு2:12,1பேதுரு2:21)

1. தன்னைத்தான் வெறுத்தல் என்பது எல்லாவிதமான உலக நம்பிக்கைகளை கைவிட்டு, நோக்கங்களை கைவிட்டு தன் சுய திட்டங்களை(சித்தங்களை)விட்டு, தேவ சித்தத்தை செய்ய முற்படுவது
2. தன் சிலுவையை சுமப்பது - தன் சுயசித்தத்தைவிட்டு தேவ சித்தத்திற்கு தன்னை ஒப்புக்கொடுப்பது
3. பின்தொடர்தல் இவற்றை எல்லாம்விட்டு நடக்கும்பொது, சிலுவையும் துன்பமும் வெகு சுலபமாக(லகுவாக) இருக்கும். அவருடைய (இயேசு) அடிச்சுவடை பின்பற்றுவது, அதன்பிறகு

மரணபரியந்தம் உண்மையாய் இருப்பதை சுட்டிக் காட்டுகிறது.

ஏன் இவற்றையெல்லாம் செய்யவேண்டும்?

இயேசுகிறிஸ்து இவ்வாறு தம்மை ஒப்புக்கொடுத்தார் .ஏன்?

உலகத்தை ஆசீர்வதிக்கவும், ஆளுகை செய்யவும்.நாமும் அதேபோல் நடக்கும்போது நமக்கு அந்த ஆசீர்வாதத்தை பிதாவாகிய தேவன் தருகிறார். இவைகள் எல்லாம் முடிந்தும் ராஜாவின் அறைக்கு கடந்து செல்லலாம்.

### *ராஜாவின் அறை*

பிரமிடின் மேலான அறை ராஜாவின் அறை. இது பரலோக இரட்சிப்புக்கு அடையாளமாக இருக்கிறது. இந்த அறையில் சவப்பெட்டிபோல் ஒரு பெட்டிஉள்ளது(இந்த பெட்டி பொக்கிஷங்களை வைக்கக்கூட பயன்படுத்தப்பட்டு இருக்கலாம்). இந்த பெட்டிக்கு மூடி இல்லை. திறந்தே இருக்கிறது. இது எதைக் குறிக்கிறதென்றால், தேவன் சபைக்குத் தரப்போகிற திவ்ய சுபாவத்தில் இரண்டாம் மரணம் இல்லை.சாவாமையுள்ள உயிர்த்தெழுதலை குறிக்கிறது.

**2பேதுரு 1:4**

***"இச்சையினால் உலகத்தில் உண்டான கேட்டுக்குத் தப்பி திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாகும்பொருட்டு.."***

**வெளிப்படுத்தல் 2:10**

***"நீ மரணபரியந்தம் உண்மையாயிரு.அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன். தேவனுடைய மகா பெரிய வாக்குத்தத்தங்கள் இவைகளை உறுதிப்படுத்துகின்றன.***

**வெளிப்படுத்தல் 20:6**

***"முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான். இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரம் இல்லை "***

ஆம். இரண்டாம் மரணம் இவர்களை அதிகாரம் செய்வதில்லை. இனி மரணத்திற்கு இவர்கள்மேல் அதிகாரம் இல்லை.

**ரோமர் 2:7**

***"மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவன் அளிப்பார்.***

மற்றும் 1கொரிந்தியர் 15:53,54, வெளிப்படுத்தல் 1:18, யோவான் 5:26.

இயேசுவுக்கு கொடுக்கப்பட்ட அதே சுபாவத்தை தேவன் சபைக்கு தருவதை பார்க்கிறோம்.

சபைக்கு - இயேசுவின் சுபாவத்தையும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு தூதர்களின் சுபாவமான(நித்திய ஜீவன்) நிலையைக் கொடுக்கிறார்.

### *ராணியின் அறை* (The Queens chamber)

ராணியின் அறை பூலோக இரட்சிப்பிற்கு அடையாளமாக சொல்லப்படுவதை நாம் பார்த்தோம். இந்த ராணியின் அறைக்குச் செல்ல (பூலோக இரட்சிப்புக்கு ஒரு சம அளவான பாதை

இருப்பதை பார்க்கிறோம். இது ஏழு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. முதல் 6 பகுதிகளின் உயரம் 465இஞ்ச் ஆகும். அடிமையைப் போல சற்று குனிந்து செல்லவேண்டும். இது எதைக் குறிக்கிறதென்றால் 6000 வருடங்களாக இந்த உலக ஜனங்களின் வாழ்க்கை அடிமையின் வாழ்க்கையைப்போல் இருந்ததைக் குறிக்கிறது.

**ரோமர் 6:17,20**

***“முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும்..***
***பாவத்திற்கு நீங்கள் அடிமைகளாயிருந்த காலத்தில்..”***

6000 வருடமாக தீமையின் காலத்தில் பாவத்திற்கு அடிமைகளாயிருப்பதை குறிக்கிறது.

ஏழாவது பாவத்தின் உயரம் 66.5 இஞ்ச் ஆகும். இதில் குனிந்து செல்லாமல் நிமிர்ந்து சவுகரியமாக செல்லலாம். இது எதைக் குறிக்கிறதென்றால், 7000 வருடத்தில் அதாவது ஆயிரவருட ஆட்சியில் மக்கள் எந்த தீமையின் அடிமைத்தனமும் இன்றி தேவனால் சௌகரியமாக நடத்தப்படுவதைக் குறிக்கிறது.

6000 வருஷம் தீமையின் வாழ்க்கை,
1000 வருஷம் நன்மையின் வாழ்க்கையை விட்டு நன்மை செய்ய பழகும்பொது எப்படி இருப்பார்கள் என்று வேதம் சொல்லும்போது,

**ஏசாயா 13:12**

***“புருஷனை பசும்பொன்னிலும் மனுஷனை ஓப்பீரின் தங்கத்திலும் அபூருவமாக்குவேன்”***

**யோபு 23:10**

***“ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார்.***
***அவர் என்னை சோதித்தபின் பொன்னாக விளங்குவேன்”***

கண்ணுக்குத் தெரிகின்ற கிறிஸ்துவின் ராஜ்யம் பூமியில் ஸ்தாபிக்கப்படும்போது ஜனங்கள் எல்லோரும் கர்த்தரை அறிந்துகொள்வார்கள்.

**சங்கீதம் 22:27**

***“பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும்.***
***ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமுகத்தில் தொழுதுகொள்ளும்”***

எப்போது இப்படி நடக்கும்?

**சங்கீதம் 22:28**


***“ராஜ்யம் கர்த்தருடையது, அவர் ஜாதிகளை ஆளுகிறவர்”***

1000 வருட அரசாட்சியில் ராஜ்யம் கர்த்தருடையதாக இருக்கும்போது இப்படியாக பூலோக இரட்சிப்பு பூமியில் நடைபெறுவதை ராணியின் அறை அடையாளப்படுத்துகிறது.

இவ்வாறாக கீசா பிரமிடு ஆழமான சத்தியங்களை நம்மிடம் பேசாமல் பேசுகிறது.

**ஆமேன்**

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/bibleresearch/


THE GREAT PYRAMID OF GIZA
SECOND DISPENSATION
or "PRESENT EVIL WORLD"
THIRD DISPENSATION
FIRST DISPENSATION
PATRIARCHAL AGE
JEWISH AGE
GOSPEL AGE
MESSIANIC AGE
AGES TO COME
King's Chamber
Ante Chamber
Grand Gallery
Red Granite Plug
Horizontal Passage
Queen's Chamber
Original Entrance
Entrance
Ascending Passage
Grotto
Descending Passage
Well Shaft
Pit
R